19th November 1963]

நரம்புச் சிலந்தி வியாதி (தஞ்சை மாவட்டம்)

* 298 கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா: கனம் சுகாதார அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை மாவட்டத்தில் எந்தெந்த தாலூகாவில் எந்தெந்த கிராமங்களில் 'நரம்புச் சிலந்தி' வியாதி உள்ளது?

(இ) இந்த வியாதியைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) & (இ) சபையில் ஓர் அறிக்கை [a] வைக்கப்பட்டுள்ளது.

திரு. ஆ. கு. சுப்பையா: ஸார், இந்த வியாதியைத் தடுப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறியலாமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: இந்த வியாதியை தடுப்பதற்கு ஸ்பெஷல் ஸ்டாஃப் போட்டு 1959 டிசம்பரிலிருந்து வேண்டிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பாதுகாப்பு குடிநீர் திட்டம் இதற்காக போடப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் முழுவதுமாக நிறைவேற்றப்படுவது வரையிலும் இந்த வியாதியை அறவே ஒழிப்பது என்பது இயலாத காரியமாக தோன்றுகிறது.

Rural dispensaries

* 299 Q.—SRI R. S. VEERAPPA CHETTIAR: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) Whether it is a fact that restrictions have been imposed for the opening of Rural Dispensaries by the Panchayat Union Councils, in view of the emergency; and

(b) if so, whether there is any proposal to relax the order?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: (a) No.

(b) Does not arise.

திரு. ரா. சு. வீரப்பச் செட்டியார்: ரூரல் டிஸ்பென்ஸரி திறக்கக் கூடாது என்று உத்தரவு போடப்பட்டுள்ளது என்று சேலம் அபிவிருத்தி மண்டலக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. அம்மாதிரி இல்லை என்றும் விவரம் தெரியவருகிறது. எது உண்மை என்பதை தெரிந்து கொள்ளலாமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: அரசாங்கத்திலிருந்து அம்மாதிரி எந்தவிதமான உத்தரவும் போகவில்லை.

Central Jail (Madurai)

* 300 Q.—SRI S. MADHAVAN: Will the Hon. the Minister for Information and Publicity be pleased to state—

(a) whether it is a fact that the Government have granted permission for His Holiness Sri Sankaracharya of Kamakoti Peedam to visit the Central Jail at Madurai on 23rd June 1963;

---

a 313-315-ம் பக்கங்களில் நான்காவது இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.